தலைவர் அவர்கள் தெரிவிக்கட்டும். அதுவரையில் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களிடத்திலே இரண்டு ஆதாரமும் இருக்கட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய சட்டமுன்வடிவு அவையின் முன் அனுமதியுடன் முதலில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 82/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் சந்தை (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 82/1986) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் விளைபொருள்களை வாங்குதல் மற்றும் விற்றலை முறைப்படுத்துதலுக்கும், அத்தகைய நோக்கங்களுக்காக மாநிலத்தில் அங்காடிகளை நிறுவுதலுக்கும், முறையாக நிருவகித்தலுக்கும் வகை செய்யும் வகையில் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்டம் விரிவாக திருத்தப்பட்டுள்ளது. இந்தச்

**1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS